<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

OS.No.909/2023 பெயர்-ரித்திகா நாள்.18.06.2024

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

என் தந்தை வழி தாத்தா துளசிமணியின் தகப்பனார் பெயர் சின்னதம்பி என்றால் சரிதான். மேற்படி சின்னதம்பியின் தகப்பனார் பெயர் கருப்பண்ணகவுண்டர் என்றால் சரிதான். சின்னதம்பிகவுண்டருக்கு இரண்டு மகன்கள் என்றால் சரிதான். சின்னதம்பிகவுண்டர் எப்போது இறந்தார் என்றால் எனக்கு 3 வயது இருக்கும்போதே இறந்துவிட்டார், தேதி குறிப்பாக தெரியாது. மேற்படி சின்னதம்பிகவுண்டரின் இரண்டு மகன்கள் பெயர் துளசிமணி மற்றும் நல்லமுத்து என்றால் சரிதான். துளசிமணி என்னுடைய தாத்தா, பாட்டி பெயர் வள்ளியம்மாள் ஆகும். என்னுடைய தாத்தா துளசிமணி எப்போது இறந்தார் என்றால் தேதி ஞாபகமில்லை, சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக இறந்துவிட்டார். பாட்டி எப்போது இறந்தார் என்றால் 2014 ல் இறந்தார். எனது தாத்தா துளசிமணிக்கு என் தகப்பனாரான 5 ம் பிரதிவாதி செல்வராஜும், துரைசாமியும் மகன்கள் என்றால் சரிதான். என் தாயார் பெயர் காந்திமதி ஆகும். என் தகப்பனாருக்கு 1994 ம் வருடம் நவம்பர் 9 ம் தேதி திருமணம் நடந்தது. என் பெற்றொருக்கு நான் ஒரே மகள்தான். என்னுடைய பிறந்த தேதி 12.10.2000 ஆகும். நான் எம்.பி.ஏ படித்துள்ளேன். பள்ளி படிப்பை 2017 ல் முடித்தேன். நான் இளநிலை கல்வியை எங்கே படித்தேன் என்றால் கோயமுத்தூரில் படித்தேன். 2021 ல் முடித்தேன். எம்.பி.ஏ. மேற்படிப்பை 2023 ல் முடித்தேன். 2018 ல் அக்டோபர் மாதத்தில் எனக்கு 18 வயது முடிந்தது. நான், என் தகப்பனார் மற்றும் தாயார் ஆகியோர் நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும், வழக்கிலும் குறிப்பிட்டுள்ள விலாசத்தில்தான் குடியிருந்து வருகிறோம்.

(1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கோரப்பட்டதின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)